புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===============================================================================

# ஈரோடு தமிழன்பனின் ஊர் சுற்றி வந்த ஓசை என்னும் கவிதைத்தொகுப்பு எடுத்தியம்பும் இன விடுதலை

*ந.தீபா,*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*பதிவு எண் : 20113164022033,*
*தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,*
*ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி),*
*நாகர்கோவில் - 629 003,*

*முனைவர். செ. செல்வ ஷோபா,*
*ஆய்வு நெறியாளர்*
*உதவி பேராசிரியர், தமிழாய்வு மையம்,*
*ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி),*
*நாகர்கோவில் - 629 003,*

===============================================================================

*சங்க காலம் முதல் தற்காலம் வரை கவிதையானது காலத்திற்கேற்ப மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வருகிறது. வாசகன் ஒரே வகையில் தேங்கிவிடாமல் இருக்க மொழி தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது. வானம்பாடி கவிஞரான ஈரோடு தமிழன்பன் என்பவரது ஊர் சுற்றி வந்த ஓசை பொது நிலையில் சமுதாய, பண்பாட்டு, இன விடுதலை உணர்வுகளின் வெளிப்பாடாக அமைகிறது. கவிஞர் தம்முடைய கவிதைகளில் இன விடுதலை, அதாவது அரசியல் சார்ந்த செய்திகளை சமூகச் செய்தியோடு ஒப்பிட்டு கவிதைப் படைத்துள்ளார். சமூகம் அன்றாடம் எதிர்கொள்ளும் வலியைத் தம் கவிதைகள் வழிச் சாடியுள்ளார். மேலும் விடுதலைச் சார்ந்த செய்திகளை சமூகத்திற்கு தைரியமாக எடுத்துக் கூறியுள்ளார். இவரது கவிதைகளில் விடுதலை உணர்வு ஒட்டு மொத்தமாக மேலோங்கி காணப்படுகின்றது. 1985 முதல் 1989 வரையுள்ள காலக்கட்டத்தில் கவியரங்குகளில் தமிழன்பன் படைத்தக் கவிதைத் தொகுப்பு ‘‘ஊர் சுற்றி வந்த ஓசை’’ ஆகும். இந்நூலில் மனித வாழ்க்கையின் நடப்பு நெறிகள், சமுதாயச் சீரழிவுகள், வேலை இல்லாமல், கூலி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுவது போன்ற செய்திகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் சமுதாய நிலைகளை கண்டு சினம் கொள்கிறார். இவரது கவிதைகள் மனித மனத்தில் நம்பிக்கை விதைகளைத் தூவிச் செல்கின்றது. இவரது கவிதைகள் சமூகத்தின் மாற்றத்தை எதிர்கொள்வதாகவே அமைந்துள்ளன. கிழக்கைக் கிழித்து விடியலை நோக்கி பயணிக்க வேண்டும் என்ற இன உணர்வை இக்கவிதை நமக்கு துண்டுகின்றது.*

*முன்னுரை :*

*கலை, கவிதை முதலியன காலத்தை அழகுப்படுத்துகின்றன என்று சொல்லப்படுவது உண்டு. காலத்தை அழகுப்படுத்துவது மட்டுமே இவற்றின் நோக்கம் அல்ல. காலத்தை, வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டுவதும், விமர்சிப்பதும், சீர்தூக்கித் தீர்ப்பளிப்பதும், கண்டனங்கள் செய்வதும், புதிய வழிகளைக் காட்டுவதும் கவிதை மற்றும் இலக்கிய வகைகள் செய்து வருகிற காரியங்களாகவும் இருக்கின்றன.*

*மனித வாழ்க்கையில் இருளை ஏற்படுத்திய காரணங்களைக் கருக்கும் தீப்பந்தமாகவும், இருளை விரட்டி வழிகாட்டும், புதிய உலகைப் புலப்படுத்தும் தீபமாகவும் கவிஞரின் கவிதைகள் அமைகின்றன. கவிஞரின் பாடல் வரிகள் வெப்பச் சீற்றமும், ஒளியின் வீச்சுமாக மாறி மாறிக்காட்சி தருகின்றன. மனித மனங்களை எழுச்சியுறச் செய்யவும், அவர்களை ஒடுக்கிய உள்ளங்கள் பதைக்கவும், நலிந்து கிடக்கும் நெஞ்சங்களில் நம்பிக்கைப் புனல் வார்க்கவும் கவிப் படைத்துள்ளார்.*

*‘‘உங்களைச் சுற்றி உலா வருகிறது,*
*ஊர் சுற்றி வந்த ஓசை என்னும் பெயர் சூடி’’*

என்னும் கவிஞரின் வரிகள் நம்மை ஊர் சுற்றிப் பார்க்க வைக்கின்றது என்றே கூறலாம். இவரது கவிதைகளில் புரட்சித் தன்மையும், அவர் எடுத்துச் சொல்கிற கருத்துக்களில்; புதுமை வேகமும், காலத்தின் தேவையும் பார்க்க முடிகின்றன. இத்தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள கவிதைகளில் இனம் பற்றிய செய்திகள் அதிகமாக இடம் பெறுகின்றன. மேலும் நம் தமிழினம் பிற இனத்தவரிடம், பிற நாட்டவரிடம் படும் துன்பங்களை, துயரங்களை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கவிதையின் மையக்கருத்தாக இன உணர்வு இழையாய்ப் பின்னப்படுகின்றது.

*ஊர் சுற்றி வந்த ஓசை :*

அரசியல் சூழல் காரணமாக இந்திய மண் அந்நியரிடமிருந்து விடுதலை பெற்றுப் பல்லாண்டுகளாகியும் உண்மையான விடுதலையைப் பெறவில்லை என்ற மனப்பதிவை இக்கவிதையில் கவிஞர் பதிவுச் செய்துள்ளார். அநீதி தன்னை நீதி எனக்காட்டிக் கொள்ளும் நிலையில் உண்மையான நீதி தண்டிக்கப்பட்டு இரத்தம் சிந்துவது தவிர்க்க முடியாத நிகழ்வாகிறது என்பதை “ஊர் சுற்றி வந்த ஓசை” கவிதை உணர்த்துகிறது. சமகால நீதித்துறையின் செயல்பாடுகளும் உண்மைக்கு புறம்பாக செயல்படுகின்றது என்பதை இக்கவிதை சுட்டிக்காட்டியுள்ளது.

*புத்தாண்டு வரவேற்பு :*

ஏழு சுரங்களில் கவி நாதசுரங்கள் முழங்க வேகமாய் வருகிறது வெற்றித் தேர். இவ்வரங்கில், புத்தாண்டு பிறப்பிற்காக வானில் எந்த நட்சத்திரமும் பூக்காது. ஏனெனில் அவை அனைத்தும் வார்த்தைகளாய் வந்து இங்கு கவிதைகளில் அமருகின்றது. வருகின்ற புத்தாண்டை வரவேற்க வேண்டும். வழியனுப்ப வேண்டியதை வழியனுப்பி வைக்க வேண்டும் என சித்திரை மாத புத்தாண்டை வரவேற்று பழைய கவலைகளை மறந்து, சித்திரை முதல் நாளில் மனதிற்கு விடுதலை கொடுப்போம் என விடுதலை உணர்வை ஊட்டியுள்ளார்.

“முடிந்த ஆண்டுகளின்
சாம்பல்
புழுதிபட்டுப்
புத்தாண்டின் உடையெல்லாம்
அழுக்கேற வேண்டாம்” ப – 35

பழைய எண்ணங்கள், கவலைகள், அழுக்குகள் புதிய ஆண்டை தொடர வேண்டாம். கழிந்தவை கடந்தவையாகவே அமையட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

*உழைப்பு :*

இனிய சித்திரை புத்தாண்டில் அடியெடுத்து வைப்பவர்கள் வேர்வை என்னும் ஈரமான கயிறு பூட்டி இழுப்போம். அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் யாரும் வெளிநடப்பு செய்ய வேண்டாம் அதாவது வேலைக்கு செல்லாமல் இருக்க வேண்டாம்.

உழைப்பவர்கள்
கைகள்
காய்த்திருக்கும்........
வாழ்க்கை மட்டும்
கனிந்ததில்லை ! இனி,
அவர்கள்
உள்ளங் கைகளில்
ஓடி வரும் வெற்றித் தேர்.

ஒருவருக்கு சமுதாய மதிப்பினைத் தரவல்லது உழைப்பே ஆகும். உழைப்பு இல்லையேல் சமுதாயத்தில் மதிப்பற்றவர் ஆகிவிடுகின்றனர். இதனை “உழைப்பு தனிமனித ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், காப்புக்கும், சமுதாய மதிப்பிற்கும் காரணமான போதிலும், அதனுடைய முழுமை நோக்கிய பயன் என்பது மனித இனம் முழுவதையும் உள்ளடக்கிய நோக்கினதாகவே

*அடைகிறது" [1] என்கிறார் முனைவர். கு. மோகனராசு. உழைப்பு தனிமனித வாழ்விற்கு இன்றியமையானது என்பதை கவிஞரும் உணர்த்தியுள்ளார்.*

*நம்மை அழித்து விட வேண்டும் என்ற ஆயுதம் இரவிடமும் இல்லை, பகலிடமும் இல்லை. இருப்பது நம்முடைய இதயத்தில் தான். ஒருவரை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் இதயத்தில் இருந்து தான் பிறப்பெடுக்கின்றது என்ற உண்மையை உடைத்தெறிந்துள்ளார்.*

*இயற்கை :*

*விதைகளின் காதில் அதன் எதிர்காலத்தை விளக்கி கூறுகின்றது. அதனால் விதைகள் முளைத்து செழிப்பாக்குகின்றது. அது போல நமக்கு மட்டும் இயற்கை அழிவையா தரப்போகிறது.*

*"இறப்பதற்கே*
*பிறந்ததாய் எண்ணிப் பழகியதால்*
*நமது*
*மூச்சில் கூட நாம் வாழ்வதில்லை*
*மரணம் வாழ்கிறது" – ப-42*

*பகல்கள் எல்லோருக்கும் சமமாய்க் கிடைப்பது போல வாழ்க்கை கிடைக்கட்டும். மண்ணின் வற்புறுத்தல் இல்லாமல் பசும்புல் வளர்வது போல அனைவர் மனத்திலும் அன்பு வளரட்டும் என கவிஞர் வெற்றியின் தன்மையை அனைவருக்கும் எடுத்துரைக்கின்றார்.*

*தேசத்தைக் காத்தல் செய் :*

*சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இவை மூன்றும் அழியாத வெற்றியின் காண்டங்கள் ஆகும். இவை மூன்றும் இருந்தால் தான் தேசத்தைப் பாதுகாக்க முடியும் என அறைகூவர் விடுக்கின்றார். அப்போது தான் தேசத்தில் வாழுபவர்களை காப்பாற்ற முடியும்.*

*"தேசம்*
*இருந்தால்தான்*
*சுரண்ட முடியும் என்பதனால்*
*முண்டாசுப் பாரதி*
*முதுகுக்குப் பின்னிருந்து*
*எத்தர்களும் நித்தம்*
*இப்படித்தான் சொல்கிறார்கள்" – ப-53*

*என தேசத்தை சுரண்டும் அரசியல் வாதிகளைச் சாடியுள்ளார்.*

*"இரைப்பையைக்*
*காலியாகவே வைத்திருங்கள்*
*வந்தே மாதரத்தை*
*வறுத்துத் தருவார்கள்........*
*தொட்டுக் கொள்ள*
*ஜெய்ஹிந்த் உண்டு" – ப-54*

*என நாட்டு மக்களுக்கு தனது நாட்டின் நிலையை எடுத்துக்கூறி விடுதலை உணர்வை தூண்டுகின்றார். வேர்வை மிகவும் மகத்தானது. கேவலம் பணத்திற்காக அதை விற்றுப் போடாதீர்கள் எனவும் கூறுகின்றார். தந்தை பெரியார், காந்தி ஆகியோரிடம் நாம் கற்றுக் கொண்டவைகள் அவர்களது வாரிசுகளிடம் வெற்றியை வசூலித்து விட்டது எனவும் கூறியுள்ளார். ஒருமைப்பாட்டைக் காக்க ஒவ்வோர் இனமும் தன்னை இழக்கத் தயாராக வேண்டும் எனவும்,*

*"தமிழின்*
*இரத்தத்தைத் தொட்டு*
*இந்திக்குத்*
*திலகம் தீட்ட*
*நீளும் கையைத்*
*துண்டித் தெறிவதே எமது*
*முதல் வேலை*

உலகனாய் இருக்கும் நான்
நிச்சயமாக இந்தியன்
அதைவிடச்
சத்தியமாகத்
தமிழன்" – ப-61

என இந்தி திணிப்பு பற்றிய தனது கருத்தை அச்சம் இல்லாமல் முன் வைக்கின்றார். அரசியல் வாதிகளின் அராஜகப் போக்கை வெட்ட வெளிச்சமாக தோலுரித்துக் காட்டியுள்ளார். மேலும் வறுமையைப் பற்றி குறிப்பிடுகையில், வறுமை என்பது உலகில் இருந்து அகற்றப்பட வேண்டியவற்றில் முதன்மையான ஒன்றாகும். வறுமை இல்லையேல் நாடு வலிமை அடையும் எனலாம். எனவே வறுமையில் இருந்து விடுப்பட்டால் தான் நாடு வளம்பெறும் என அறைகூவல் விடுகின்றார்.

அரசியல் :

கவிஞர் அரங்கேற்றியுள்ள கவிதைகள் இன்றைய நம் வாழ்வின் எல்லா அம்சங்களையும் வெளிப்படுத்தி விடுவனவாக உள்ளன.

"தலைவன் சிறையில்
தீக்குளித்தோம்
தலைவன் நோயில்
தற்கொலை புரிந்தோம்
இப்படித்
தனிநபர்க்குச் செத்தோம் - ஒரு
தத்துவத்துக்குச் செத்ததில்லை" – ப-68

இதையே "அதிகார அமைப்பைச் செயல்படுத்தும் அதிகாரிகளும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கும் நீதிமன்றங்களும், அவற்றிற்குத் துணையாக உள்ள காவல் படையும் படைத்துறையும் இல்லை. ஆனால் அச்சமுதாயங்களில் ஒரு வகையான அரசியல் முறை செயல்படுகிறது. ஆகவே இங்கு அரசியல் முறை என்பது அரசியலோடு தொடர்புடைய கருத்தாக்கமாகவே விளங்குகிறது" [2] என பக்தவத்சலபாரதியும் குறிப்பிட்டுள்ளார். கவிஞரும் இதையே குறிப்பிடுகின்றார். நிவாரணச் சாவுகளால் உயிரைக் கேவலப் படுத்தாதே. மரணத்தையம் ஓர் இலட்சியத்தால் அலங்கரித்துவிட்டுப் போக வேண்டும் என்கிறார்.

இருளில் இருந்து ஒளியைத் தேடி :

இருளில் இருந்து கொண்டு வெளிச்சத்தை எவ்வாறு தேடுவது, இருப்பது இருளில் என்பதை தெரியக் கூட, வெளிச்சம் வேண்டுமே என வினவுகின்றார்.

"ஒளி,
மனிதனின் கண்களில்
கல்விக் கூடங்களில்
நீதி மன்றங்களில் வாழ்வதைவிட
இன்று
விலங்குகளோடு
இருப்பதே சரியென்று
புறப்பட்டுப் போனது
குகைகளுக்கு !" – ப -136

சமூகத்தில் பல ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், படிக்காதவன் என பல நிலைகள் காணப்படுகின்றன. சமூகத்தில் நிகழும் தற்போதைய நிலையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வாழ்க்கையில் விதவிதமாய் வேடம் போட்டு திரியும் மக்களை பற்றி குறிப்பிட்டுள்ளார். "ஒழுக்கம் உடையவரின் கல்வியானது கேட்டிலும் பற்றுக்கோடாய் நிற்கும். உள்ளம் சென்ற இடமெல்லாம் செல்லவிடாமல் அறிவு அறனாக அமைந்து தீயவற்றிலிருந்து நீக்கி நன்மையின் பால் செலுத்தும் எனக் கூறுகிறார்.

இவற்றின் மூலம் கல்வியும் அறிவும் மக்களை நல்வழிப்படுத்தல் வேண்டும் என்ற வள்ளுவரின் கருத்தினை அறிய முடிகின்றது" [3]. ஆனால் இன்றைய கல்வி ஒளி பெறவில்லை. பணத்திற்கு அடிமையாகி விட்டது. என்று தான் அதற்கு விடுதலை கிடைக்குமோ? என கவிஞர் வினவுகின்றார். இன்றைய சமூக மக்களுக்கு, அதாவது தமிழினத்திற்கு என்று விடுதலை கிடைக்கும் என விடியலை தேடி காத்திருக்கின்றனர்.

முடிவுரை :

ஊர் சுற்றி வந்த ஓசை என்னும் கவிதையில் கவிஞரின் சமுதாய உணர்வு மிகுந்து காணப்படுகின்றது. சமுதாயத்தோடு நமக்கு தொடர்பு உண்டு என்ற உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் வர காரணம் கவிஞர் தான். மரத்துக் கிடக்கும் மானுடத்தை உயிர்ப்பிக்கிறார். சமுதாயத்தின் இருட்டான களங்களை இனங் கண்டு வேறருக்கிறார். ஒளிப் பயணத்திற்கு அழைத்து செல்கிறார். தமிழினத்திற்கு இருளில் இருந்து விடுதலை அளிக்க முற்படுகின்றார்.

அடிக்குறிப்புகள் :

1. வாழ்க்கை வள்ளுவம், முனைவர் கு. மோகனராசு, ப-55
2. பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சலபாரதி, ப-551
3. வள்ளுவரும் வள்ளலாரும் கண்ட சமுதாயம், முனைவர் ம. இளங்கோவன், ப-45.

பார்வை நூல்கள் :

1. முனைவர் கு. மோகனராசு, 2006 – மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு,
பாரிமுனை,
சென்னை – 600 108.

2. பக்தவத்சலபாரதி 1999 - மணிவாசகர் பதிப்பகம்,
8/7, சிங்கர் தெரு,
பாரிமுனை,
சென்னை – 600 108.

3. முனைவர் ம.இளங்கோவன் 2003 - பாடுமீன் பதிப்பகம்
293, அகமதுவணிக வளாகம்,
இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை – 600 014

********* ********* ********** ********* ********* ********** ********** **********